## பேலியகொட மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு 2017

---

பேலியகொட மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2010 யூன் 03 ஆந் திகதிய அமப/10/0958/438/001 இலக்க அமைச்சரவை அங்கீகாரத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2.4 மற்றும் 2.2.5 ஆம் பந்திகளில் குறிப்பிட்ட விடயங்களின் விளைவாக நிதி நிலைமைக் கூற்றில், விரிவான வருமானங்கள் கூற்றில் மற்றும் தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்றில் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாக காணப்படுகின்றதா என்பதனை நிச்சயிக்க முடியாதுள்ளளேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் 2.2.4 மற்றும் 2.2.5 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொறுப்பின் இருப்பாக காணப்பட்ட முறையே ரூபா 156,800 மற்றும் ரூபா 16,300 தொகையான மின்குமிழ்கள் மற்றும் ரீ சேர்ட்களின் பெறுமதி நியமம் இலக்கம் 01 இன் 70 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் இருப்பாக காண்பிப்பதற்குப் பதிலாக கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறுவனவின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெய்மையாய்வு அறிக்கைகளில் உறுதிப்படுத்தாத ரூபா 16,300 பெறுமதியான ரீ சேர்ட் இருப்பு 2016 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் மேலும் அது இருப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நியமம் இலக்கம் 02 இன் 18 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப் பாயச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கிவல்லை.

(இ) நியமம் இலக்கம் 07

i. நியமத்தின் 57 ஆம் பந்திக்கு முரணாக ரூபா 38,598,438 ஆன சுத்தகரிப்பு இயந்திர கூடத்தின் இயந்திரங்கள் மற்றும் கட்டிடங்களில் வெவ்வேறாக இனங்காணப்படாமல் 5 சதவீதம் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.

ii. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் அமுலாகும் வகையில் முச்சக்கர வண்டி, சீசீடீவி கெமறா முறைமை கணக்கீட்டு பொதி மற்றும் ஏனைய சொத்துக்கள் ரூபா 3,491,175 இற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நியமத்தின் 90 ஆம் பந்தியின் பிரகாரம் இறுதி வெளிப்படுத்தல் மேற்கொள்ளல் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஈ) 2016 திசெம்பர் 07 ஆந் திகதிய அமப/16/2461/725/034-1 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்திற்குரிய காணி பகுதிக்காக ரூபா 216 மில்லியன் திறைசேரியிடமிருந்து கொடுப்பனவு செய்வதற்கு நிதி அமைச்சர் இணங்கியுள்ளதாக அமைச்சரவ கருத்திற்கொண்டதன் பின்னர் அக்காணி கடற்றொழில் மற்றும் நீர் வழங்கல் அபிவருத்தி அமைச்சிற்காக கையளிப்பதற்காக அங்கீகாரம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் அறிக்கை திகதி வரை இக்காணிப் பகுதி அமைச்சிற்கு பொறுப்பேற்ற நம்பிக்கை பொறுப்பிற்கு சட்டரீதியான உரித்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் நியம இலக்கம் 08 இன் 105 பந்தியின் பிரகாரம் பொறுப்பினால் அறிக்கையிடப்பட்டிருந்த திகதியில் உள்ள அந்த எதிர்பாராத சொத்துக்களின் தன்மை ிபரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

2017 சனவரி 01 இல் உள்ளவாறு முகாமைத்துவு பொறுப்பில் காணபபட்ட ரூபா 365,000 பெறுமதியான முச்சகர வண்டி மற்றம் ரூபா 2,000,000 பெறுமதியான சீசீடிவி கெமா முறைமை ஆண்டிற்கு ரூபா 33.33 வீதம் பெறுமான்தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் அப்பெறுமானத்தேய்வு விகிதங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளியிப்படுத்தியிருக்கவில்லை.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் கிடைத்த வாடகை வருமானம் ரூபா 60,000 மற்றும் பெற வேண்டிய கூலி வருமானம் ரூபா 37,500 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பதவியணியினருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த ரூபா 130,240 பெறுமதியான ரீ சேர்ட் இருப்பு மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கிடைக்க வேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**2.2.4 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் இறுதி மீதிகள் மற்றம் மீளாய்வாண்டின் பேரேட்டுக் கணக்குகளில் ஆரம்ப மீதிகளுக்கு இடையே 2 கணக்குகளில் ரூபா 6,635,956 கூட்டுத்தொகை கூடுதலாகவும் 12 கணக்குகளில் மொத்தம் ரூபா 15,597,240 தொகை குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கம் போது 08 பேரேட்டுக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 3,156,890 கூடுதலாகவும் 27 கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 53,036,351 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக்கூற்றில் காண்பிக்கப்படும் கழே காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகள் தொடர்பாக போதிளவு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அம்மீதிகளின் சரியான தன்மை கணக்காய்விற்கு உறுதிப்படுத்த முடியவில்லை. கூட்டுப்பெறுமதி ரூபா 116,752,402 தொகையான மூன்று நிலையான 2017 தவைப்புக்களுக்குரிய வைப்புச் சான்றிதழ் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

i. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,688,947,900 பெறுமதியான கட்டிடங்கள் எவையென இனங்காண்பதறகுரிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

ii. 2014 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்து வரும் ரூபா 5,550,000 ஆன தற்காலிகமாக மீள் செலுத்த வேண்டிய வைப்பு மீதிகள்)

iii. மொத்தம் ரூபா 4,825,704 ஆன கடன் மீதிகள்

iv. கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகளின் கீழ் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் பெயரிலான ரூபா 17,163,422 மற்றும் ரூபா 250,250 தொகையான உற்சவ மற்றும் விசேட முற்பண மீதிகள்

(ஆ) காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்படும் ரூபா 18,900 தொகையான முன்னைய ஆண்டின் பிழையான மீதிக்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.3 முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பினை தாபித்தல்**

கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சரினால் 2010 மே 14 ஆந் திகதி முன்வைக்கப்பட்ட பேலியகொட மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பினை தாபிப்பதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2010 யூன் 03 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அதன் தீர்மானத்தின் பிரகாரம் முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு தாபிக்கப்பட்டிருந்த போதிலும் 2019 ஒக்தோபர் 10 வரையிலும் நியதிச்சட்ட நிறுவகமொன்றாக சட்டவாக்கப்படுத்த அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | i. நிதிப்பிரமாணம் 226(1) | நம்பிக்கை பொறுப்புக் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் கொடுப்பனவு செய்வதற்குரிய உரிய அதிகாரம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| | ii. நிதிப்பிரமாணம் 757 | பொருள் மெய்மையாய்வு அறிக்கை மூலம் அவதானிக்கப்பட்ட மிகை மற்றும் பற்றாக்குறை தொடர்பாக எடுத்த அறிக்கை தொடர்பான எடுத்த நடவடிக்கை அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2003 ஜுன் 03 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி | நிதியாண்டு முடிவடைந்த 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 09 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2018 திசெம்பர் 27 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. தொடர்ந்தும் காணப்படும் குறைபாடுகளை சரி செய்து திருத்திய நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்காக 2019 மே 14 ஆந் திகதி அமைச்சிற்கு மீள வழங்குவதற்கு மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எவ்வாறாயினும் எவ்வித சீராக்கமொன்றும் செய்யப்படாமல் 2018 திசெம்பர் 27 ஆந் திகித வரை |

| | |
|---|---|
| | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களே 2019 செப்தம்பர் 23 ஆந் திகதி மீள வழங்கப்பட்டிருந்தது. மேலும் வரை ஆண்டறிக்கையும் 2019 ஒக்தோபர் 10 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஈ) 2016 மே 17 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைமத்துவ நம்பிக்கை பொறுப்பு கூட்டத் தீர்மான குறிப்ப இலக்கம் 04 | மோட்டார் வாகன தொகுதியிடமிருந்து நம்பிக்கை பொறுப்பிற்கு பெறவேண்டிய வருமானம் தேறிய வருமானத்திலிருந்து 50 சதவீதமாக இருக்க வேண்டுமென திருத்தம் செய்ய வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் 2018 செப்தம்பர் இறுதி வரையிலும் அந்த உடன்படிக்கை திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நம்பிக்கைப் பொறுப்பின் நிதி விளைவுகள் ரூபா 18,620,437 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 12,728,485 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 5,891,952 ஆன வீழ்ச்சியினை காணக்கூடியதாக இருந்தது. மோட்டார் வாகனப் பிரிவின் வருமானம் பொறுப்பிற்கு இல்லாமல் பேனமை மேற்படி வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 05 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 863,735 ஆன பற்றாக்குறை 2017 ஆம் ஆண்டு வரை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 63,908,465 தொகையான பங்களிப்பொன்று 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 53,862,414 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வியாபார கடை தொகுதியின் 47 மொத்த வியாபார நிலையங்களிலிருந்து 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 5,860,000 ஆன வாடகை வருமானம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் வியாபார நிலையங்களை குத்தகைக்கு வழங்கும் போது உடன்படிக்கை செய்யப்பட்ட காலம் முடிவடைவதற்கு முன்னர் உடன்படிக்னைக காலம் நீடிக்கப்படாமை மற்றும் குத்தகை செலுத்தப்படாத சந்தர்ப்பங்களில் வேறு தரப்பினருக்கு அவ்வித்தை வாடகைக்கு வழங்குவதன் மூலம் கூடுதலான பொருளாதார நன்மைகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் இலக்கம் 1.2., 2.11, 2.14.1, 4.2, 4.3 பின்பற்றப்படாமல் மீன் விற்பனை கடைதொகுதியின் கழிவுப் பொருட்களை அகற்றுதல், பாதுகாப்பு சேவைகளை வழங்குதல், சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு சேவை மற்றும் கிருமி தொலைக் கட்டுப்பாடு சேவை ஒப்பந்தங்களுக்காக ரூபா 11,095,089 தனியார் துறைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய குத்தகை வாடகை ரூபா 65 மில்லியனில் ரூபா 26 மில்லியனான 40 சதவீதம் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வந்த போதும் அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அமைச்சுச் செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றன.

(அ) விற்பனை நிலையங்களை குத்தகைக்கு வழங்குதல்
(ஆ) மோட்டார் வாகன தொகுதியின் வருமானத்தை அறவிடல்
(இ) சேவை ஒப்பந்த பெறுகை
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணிச்செல்லல்
வியாபாரக் கொட்டகைகளை வாடகைக்கு வழங்குதல்,
வருமானக் கட்டுப்பாடு மற்றும் கணக்கீடு செய்தல்